செ.வெ.எண்.200 நாள்.22.03.2018.

திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரியில், கல்லூரி நாள் விழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து, சிறந்த மாணவ, மாணவிகளுக்கு கேடயங்களை பரிசாக வழங்கினார்.

--------

திருநெல்வேலி, பாளையங்கோட்டை அரசு பொறியியல் கல்லூரியில், கல்லூரி நாள் விழா இன்று (22.03.2018) நடைபெற்றது. இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, குத்து விளக்கேற்றி விழாவினை தொடங்கி வைத்தார். மேலும், பல்வேறு பிரிவுகளில் கல்வியில் சிறந்து விளங்கிய மாணவ, மாணவிகளுக்கு கேடயங்களை பரிசாக வழங்கினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரியில், கல்லூரி நாள் விழாவில் கலந்து கொண்டது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. பொறியியல் படிப்பில் நான்கு ஆண்டுகளில் முதலாம் ஆண்டு குடும்பத்திலிருந்து பிரிந்து சுதந்திரமாக இருப்பதை உணர்ந்து மிக்க மகிழ்ச்சியுடன் செல்லும், இராண்டாம், மூன்றாம் ஆண்டுகளில் படிப்பில் அதிக கவனம் செலுத்துவீர்கள். இறுதி ஆண்டில் படிப்புடன் பல்வேறு சுமைகளும் வரும். எதிர்காலத்தினை பற்றி அதிகம் சிந்திக்க வேண்டியிருக்கும். வேலைவாய்ப்பு, உயர்கல்வி, போட்டித் தேர்வுகள் எழுதுவது மற்றும் குடும்ப பொருளாதாரம் குறித்து பல்வேறு சிந்தனைகள் மேலொங்கும். திருநெல்வேலி மாவட்டத்தில் அதிகளவிலான பொறியியல் கல்லூரிகள் உள்ளது. அனைவருக்கும் வேலைவாய்ப்பு என்பது கடினமாகவே உள்ளது. கல்லூரி வாழ்க்கையை நன்றாக அனுபவிப்பதுடன், முதலாம் ஆண்டிலேயே நீங்கள், உங்களுக்கு என்று ஒரு குறிக்கோளை ஏற்படுத்தி விடா முயற்சியுடன் படிப்பது மட்டுமின்றி, தனித்திறமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். சிவில் சர்வீஸ் தேர்வு எழுதுபவர்கள் அதற்கு தயாராக பல்வேறு பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். புத்தகத்தில் படிப்பது மட்டுமின்றி மற்றவர்களுடன் நன்றாக பழகி, அவர்களது கவனத்தினை ஈர்க்கும் வகையில் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். படிப்பதுடன், சமூக நடப்புகள் மற்றும் உலக நிகழ்வுகளையும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். மாணவ, மாணவிகள் அனைவரும் தனித்திறன்களை வளர்த்துக் கொண்டு, நல்ல வேலைவாய்ப்புகளை பெற்று, வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டுமென பேசினார்.

இவ்விழாவில், அரசு பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் எம்.ஐசக் சாலமன் ஜெபமணி, பொறியியல் கல்லூரி மாணவர் சங்கத் தலைவர் திரு.எஸ்.ஸ்ரீதரன், செயலர் திரு.பி.கீரன்அபுக்லுதியா, மாணவர் சங்க பொறுப்பு அலுவலர் திரு.சித்தாரத்தன் மற்றும் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.